## திவ்விய எக்காள சத்தம் கேட்க

திவ்விய எக்காள சத்தம் கேட்க
இயேசு தோன்றும் காலத்தில்
ஆவலாய் அக்காட்சி கண்டானந்திப்பேன்
மீட்கப்பட்ட தாசர் ஒன்று
கூடி மோட்சலோகத்தில்
நிற்கும் போது நானும் கூடவே நிற்பேன்

தாசர் விண்ணில் ஒன்று கூடி
தாசர் விண்ணில் ஒன்று கூடி
தாசர் விண்ணில் ஒன்று கூடி
நிற்கும் போது நானும் கூடவே நிற்பேன்

நித்திரை செய்த பக்தர் உயிர்த்து
வானமேறியேகுவார்-மீட்பர்
மாண்பைக் கண்டு ஆரவாரிப்பேன்
விசுவாசிகள் எல்லாரும்
விண்ணில் கூடி வாழுவார்
அந்த நாளில் நானும் கூடவே நிற்பேன்

இயேசு நாதரின் பேரன்பை எங்கும்
கூறும் படிக்கே-சோர்வில்லாமல்
வேலை செய்து ஜீவிப்பேன்
பின்பு தாசர் ஒன்று கூடி
தேவ சந்நிதியிலே
நிற்கும் போது நானும் கூடவே நிற்பேன்